III.—LEAVE OF ABSENCE TO A MEMBER.

SRI V. K. KOTHANDARAMAN : Mr. Speaker, Sir, I move :

'That under Rule 11 of the Madras Legislative Assembly Rules, leave of absence be granted by this House to Sri M. Kalyanasundaram till the end of December 1959, from the date of his absence.'

The motion was put and carried.

IV.—CALLING ATTENTION TO THE FAILURE OF GOVERNMENT TO SUPPLY WATER TO TAIL END AYACUT OF CAUVERY-METTUR PROJECT.

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வருஷம் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்பட்டு 2½ மாதங்களுக்கு மேலாகியும் காவேரி மேட்டூர் வாய்க்கால் கடைக்கோடிப் பிரதேசங்களுக்கு தண்ணீர் வரவில்லை. இத்தகைய டெய்ல் என்டிலுள்ள பல கிராமங்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு இன்னும் நாத்து கூட பாவாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலைமையில் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அதிகாரியிடம் கூறியும் கூட கிராமங்களுக்கு அதிகமான தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. இதை நினைக்கும்போது மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது. கடந்த பல வருஷங்களுக்கு முன் அணையிலே தண்ணீர் இல்லாத காலத்திலே கூட இவ்வளவு கஷ்ட நிலைமை இருந்தது இல்லை. தண்ணீர் வழிய ஆரம்பித்தும் கூட கால்வாய் கடைசிவரையில் தண்ணீர் கிடைக்க முடியவில்லை. குறிப்பாக ஜி.ஏ. கெனலில் தலைப்பிலே மண்மூடிப்போய் தூர்ந்துப்போய் இருப்பதால் 4,300 க்யூசக்ஸ் தண்ணீர் விடப்பட்டது. இப்பொழுது 3,500 க்யூசக்ஸ் குறைந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி குறையும் காலத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகளுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படும். வடவார் சாணலில் சுமார் 3,000 ஏக்கர் நிலம் உள்ள 5 கிராமங்களுக்கு தண்ணீர் கிடையாது. ஒன்று இரண்டு கிராமங்களுக்குக்கூட தண்ணீர் கூட கிடையாது. பல முறை அதிகாரியிடம் முறையிட்டும் கூட தண்ணீர் வருவதற்கு வழியில்லை. இந்த சாணலில், இந்தக் குறை பல வருஷ காலமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்தும், ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரு வாரத்திற்கு முன்புகூட இந்த கால்வாய் சம்பந்தமாக ஒரு திட்டம் கனம் அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள். வடிகால் தண்ணீர் ஏராளமாக வீணாகப்போய்க் கொண்டிருக்கிறது. ஒரு லட்ச ரூபாய் திட்டத்தில் இதை வாய்க்காலில் கொண்டு போய் வடவாறு சாணலில் விட்டால் 3,000 ஏக்கருக்குத் தண்ணீர் சப்ளை செய்ய முடியும். உண்பவனைப் பார்த்துக்கொண்டிருந்தாலும், உழுபவனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்று கூறுவார்கள். ஒருவன் சாப்பிடுகிறவர்களைப் பார்த்தும் கூட பட்டினி கிடப்பார், ஆனால் ஒருவன் உழுபவனைப் பார்த்து, தானும் உழாமல் சும்மா இருக்கமாட்டான். சாகுபடி காலத்தில் தண்ணீர் இல்லாமல் போய்விட்டால் விவசாயிகள் அனேகர் கஷ்டத்திற்குள்ளாக வேண்டியிருக்கிறது.